# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## பணம் தூய்தாக்கல் தடை (திருத்தம்)

**2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற் கல்வி அமைச்சர் அவர்களால்
2026 மே மாதம் 05 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2026 மாச்சு மாதம் 17 ஆம் திகதியன்று வர்த்தமானியில்
வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

[60 ஆம் சட்டமூலம்]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 216.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

## சட்டம் பற்றிய கூற்று

***வாசகம் 2 :*** இவ்வாசகம், (இச்சட்டத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடையாந்தன்மையை விரிவுபடுத்துவதுமாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் பணம் தூய்தாக்கல் தவறின் நோக்கெல்லையை விரிவுபடுத்துவதும் மற்றும் அத்தவறுக்காக குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச மறியற் காலத்தின் விலக்கலுக்காக ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 4*** : இவ்வாசகம், பணம் தூய்தாக்கல் தவறொன்றை எண்பிப்பதற்காக சட்டமுறையற்ற செயலொன்றின் புரிகைக்கான குற்றத்தீர்ப்பொன்றின் அவசியத்தைத் தவிர்ப்பதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தில் 3அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துகின்றது.

***வாசகம் 5*** : இவ்வாசகம், தெளிவுபடுத்துகையின் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 6*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் பணம் தூய்தாக்கல் தவறுடன் தொடர்புபட்ட ஆதனங்களுடன் தொடர்புடைய தகவல்களை வெளிப்படுத்துவதற்குத் தவறுவதற்கான தண்டப்பணத்தை அதிகரிப்பதுமாகும்.

***வாசகம் 7*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் பணம் தூய்தாக்கல் என்னும் தவறொன்றின் புலனாய்வுடன் தொடர்புடைய தகவலை வெளிவிடுதலுக்காக விதிக்கப்பட்ட குற்றப்பணத்தை அதிகரிப்பதுமாகும்.

***வாசகம் 8*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் –

(அ) எவ் ஏதேனும் ஆதனம் அல்லது நேரொத்த பெறுமதியையுடைய ஆதனம் பணம் தூய்தாக்கல் தவறின் புரிகையில் பயன்படுத்தப்பட்டிருக்கலாமோ அவ் ஏதேனும் ஆதனம் அல்லது நேரொத்த பெறுமதியையுடைய ஆதனத்தின் மீது முடக்குதற் கட்டளையொன்றை வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதுமாகும்; அத்துடன்

(ஆ) முடக்குதற் கட்டளையொன்றின் மீறுகைக்கான தண்டனையை அதிகரிப்பதுமாகும்.

***வாசகம் 9*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் –

(அ) முடக்குதற் கட்டளையொன்றின் உறுதிப்படுத்தலுக்கான விண்ணப்பமொன்றை செய்வதற்கான ஏற்புடையற்பாலதான காலப்பகுதியையும் முடக்குதற் கட்டளையொன்றின் நீட்டித்தல் காலப்பகுதியையும் நீட்டிப்பதுமாகும்; அத்துடன்

(ஆ) முடக்குதற் கட்டளையொன்றின் அறிவித்தலை வெளியிடுதற்கு மேல் நீதிமன்றத்துக்கு ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 10*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயன் நீதிமன்றத்தின் அனுமதியுடன் தவிர, முடக்குதற் கட்டளைக்கமைந்த ஆதனத்துடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்களை தடை செய்வதுமாகும்.

***வாசகம் 11*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயன் முடக்குதற் கட்டளையொன்றுக்கமைந்த ஆதனத்துடன் தொடர்புடைய அத்தியாவசியமான கொடுக்கல்வாங்கலின் அனுமதிக்காக ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 12*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயன் முடக்குதற் கட்டளையொன்றுக்கமைந்த ஆதனத்தைப் பாதுகாத்தலுக்கு, பேணிக்காத்தலுக்கு, முகாமை செய்தலுக்கு மற்றும் கையுதிர்த்தலுக்கு ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 13*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன், அதன் சொத்தாண்மை, உடைமை முதலியவற்றை நிச்சயிப்பதற்கு முடக்குதற் கட்டளையொன்றுக்கமைந்த ஆதனத்தை உடைமையில் எடுப்பதற்கு பொலிசு அலுவலரொருவருக்கு ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 14*** : இவ்வாசகம், முடக்குதற் கட்டளையொன்றுக்கமைந்த ஆதனமொன்றுடன் சம்பந்தப்பட்ட வேறேதெனும் ஆதனத்துடன் தொடர்புடைய முடக்குதற் கட்டளையொன்றை வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தில் 12அ என்னும் புதிய பிரிவொன்றை உட்புகுத்துகின்றது.

***வாசகம் 15*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்வதுமாகும் -

(அ) பணம் தூய்தாக்கலுக்காக ஆளொருவரின் குற்றத்தீர்ப்பளித்தலின் மேல் குற்றவியல் ஆதனம் அல்லது அதற்கு நேரொத்த பெறுமதியையுடைய ஆதனத்தை இழப்பித்தல்; அத்துடன்

(ஆ) இழப்பித்தற் கட்டளையொன்றினால் ஏற்பட்ட ஏதேனும் இழப்புக்கான நட்டஈடுக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தல்.

***வாசகம் 16*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் முடக்குதற் கட்டளையொன்றுக்கமைந்த ஆதனத்தின் மேல் நல்லெண்ணத்துடனான உரிமைக் கோரிக்கையாளர்களின் உரிமைகளை மீளவளிப்பதற்கு ஏற்பாடு செய்வமாகும்.

***வாசகம் 17*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயன் 2025 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, குற்றச்செயல்களின் வரும்படிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, இழப்பிக்கப்பட்ட ஆதனத்தை கையுதிர்ப்பதுமாகும்.

***வாசகம் 18*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 17அ, 17ஆ, 17இ, 17ஈ மற்றும் 17உ என்னும் புதிய பிரிவுகளாக உட்புகுத்துகின்றது என்பதுடன் அப்புதிய பிரிவுகள் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்கின்றனவுமாகும் –

(அ) புலனாய்வொன்றுக்கமைந்த ஆளொருவரினால் சத்தியக்கடதாசியொன்றை அல்லது சத்தியப்பிரமாணம் செய்யப்பட்ட கூற்றொன்றை கொடுத்துதவுதலும் மற்றும் அத்தகைய சத்தியக்கடதாசி மற்றும் சத்தியப் பிரமாணம் செய்யப்பட்ட கூற்றின் ஏல்தகவுடையாந்தன்மையும்;

(ஆ) பொய்யான சான்றினை வழங்குவதற்கான குற்றப்பணமொன்றை விதித்தல்; அத்துடன்

(இ) புலனாய்வொன்றை நடாத்தும் போது விசேட புலனாய்வு தொழினுட்பங்கள் பயன்படுத்தப்படுதலும் கூட்டு புலனாய்வு குழுவொன்றின் தாபனமும்.

***வாசகம் 19*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் அது 12 ஆம் வாசகத்தினால் ஆக்கப்பட்ட திருத்தத்துக்கு இடைநேர்விளைவானதுமாகும்.

***வாசகம் 20*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழான தவறுகளுக்காக விதிக்கப்பட்ட தண்டணைகள் அதிகரிப்பதுமாகும்.

***வாசகம் 21*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் 21 என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயன் வெளிநாட்டு சட்ட வலுவளித்தல் முகவராண்மைகளுடன் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளின் தகவல்களை பகிர்வதற்கு ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 22*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றது என்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயன் வெளிநாடொன்றுக்கு இழப்பிக்கப்பட்ட ஆதனத்தை அல்லது ஆதனத்தின் பெறுமதியை கைமாற்றுவதற்கு ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 23*** : இவ்வாசகம் தெளிவுபடுத்துகையின் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 24*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றது என்பதுடன் இப்பிரிவின் சட்டப்பயன் இலங்கை அரசாங்கத்துக்கும் வெளிநாடுகளுக்குமிடையே உதவி வழங்குதல் தொடர்பில் 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் ஏற்புடைமைக்கு ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 25*** : இவ்வாசகம், தெளிவுபடுத்துகையின் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 26*** : இவ்வாசகம், தெளிவுபடுத்துகையின் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 27*** : இவ்வாசகம், தெளிவுபடுத்துகையின் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 28*** : இவ்வாசகம், தெளிவுபடுத்துகையின் நோக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 29*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் ஆதனத்தின் இழப்பித்தலுடன் தொடர்புடைய நடவடிக்கைமுறைகளில் வேறு நாடுகளுக்கு உதவியளிப்பதற்கு ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 30*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன் வர்த்தமானியில் ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கு காலப்பகுதியினைக் குறித்துரைப்பதுமாகும்.

***வாசகம் 31*** : இவ்வாசகம், குறித்தசில மேலதிக வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றது.

ச.வ.ஓ 41/2021

## 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** (இச்சட்டத்தில் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

“(இ) இலங்கையில் புரியப்பட்ட எந்தச் செயல் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமைகின்றதோ அந்தச் செயல்;

(ஈ) இலங்கைக்கு வெளியேயான ஏதேனும் நியாயாதிக்கத்தினுள் எந்தச் செயல் ஒன்றில் அந்நியாயாதிக்கத்தில் பணம் தூய்தாக்கல் என்ற தவறுக்கு நேரொத்த தவறொன்றாக அமையுமோ அல்லது இலங்கையில் புரியப்பட்டிருப்பின் இச்சட்டத்தின் கருத்துக்குட்படப் பணம் தூய்தாக்கல் என்ற தவறாக அல்லது ஒரு சட்ட முறையற்ற செயற்பாடாக அமையுமோ அந்தச் செயல்;

(உ) இலங்கைக்கு வெளியேயான ஏதேனும் நியாயாதிக்கத்தினுள் பந்தி (ஈ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட செயலொன்றைப் புரிகின்ற ஆளொருவர்; அத்துடன்

PL 15749- 172(2026/05)

(ஊ) எந்தச் செயல் ஒன்றில் முழுமையாக அல்லது பகுதியளவில் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே புரியப்பட்டதோ மற்றும் இச்சட்டத்தின்கீழான தவறொன்றாக அமைகின்றதோ அந்தச் செயல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) "ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டு வருவாய்களிலிருந்து" என்னும் சொற்கள் அவ்வுட்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக "ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டு வருவாய்களிலிருந்து அல்லது அத்தகைய ஆதனத்தின் ஏதேனும் மாற்றத்திலிருந்து" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்-

(i) "பெறுகின்ற, உடைமையில் வைத்திருக்கின்ற, மறைத்து வைத்திருக்கின்ற, கையுதிர்க்கின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பயன்படுத்துகின்ற, கொள்வனவு செய்கின்ற, பெறுகின்ற, உடைமையில் வைத்திருக்கின்ற, மறைத்து வைக்கின்ற, கையுதிர்க்கின்ற, கைமாற்றுகின்ற" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ii) "ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டு வருவாய் களிலிருந்து" என்னும் சொற் களுக்குப் பதிலாக "ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டு வருவாய்களிலிருந்து அல்லது அத்தகைய ஆதனத்தின் ஏதேனும் மாற்றத்திலிருந்து" என்னும் சொற்களை இடு வதன்மூலமும்;";

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(இ) ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டிலிருந்து அல்லது ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டு வரும்படிகளி லிருந்து அல்லது ஏதேனும் ஆதனத்தின் ஏதேனும் மாற்றத்திலிருந்து நேரடி யாகவோ அல்லது நேரடியாக வல்லாமலோ அடையப்பெற்ற அல்லது தேறிப்பெறப்பட்ட அத்தகைய ஆதனத்தின் பயனுறு சொத்தாண்மையைப் பெறுகின்ற"; அத்துடன்

(ஈ) "ஐந்தாண்டுகளுக்குக் குறையாததும், இருபதாண்டுகளை விஞ்சாததுமான வொரு காலப்பகுதிக்கான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒரு காலப்பகுதிக்கான" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "அத்தவறைப் புரிய உதவுகின்ற அல்லது உடந்தையாயிருக்கின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தவறைப் புரிவதில் உதவுகின்ற அல்லது உடந்தையாயிருக்கின்ற, அல்லது ஏனையோரை வசதிப்படுத்துகின்ற அல்லது அவர்களுக்கு ஆலோசனையளிக்கின்ற" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 3அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"ஐயத்தைத் தவிர்த்தல்

**3அ.** ஐயத்தைத் தவிர்ப்பதற்காக இத்தாற் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) சட்டமுறையற்ற செயற் பாட்டைப் புரிந்தமைக்கான குற்றத் தீர்ப்பொன்று பணம் தூய்தாக்கல் என்ற தவறை என்பிப்பதற்காக அவசியமாதலாகாதென்றும்; அத்துடன்

(ஆ) பணம் தூய்தாக்கல் என்ற தவறுடன் குற்றஞ்சாட்டப்படுவதுடன் அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப் படுவதுடன் சேர்த்து ஒரு சட்ட முறையற்ற செயற்பாட்டுடன் குற்றஞ்சாட்டப்படுவதிலிருந்து அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதிலிருந்து இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவரேனுமாளைத் தடைசெய்தலாகாதென்றும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, "கருதப்படுதல் வேண்டும்:-" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஊகிக்கப்படுதல் வேண்டும்:-" என்னும் சொற்களை இடுவதன்மூலமும், மற்றும் "ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டின் வருவாய்களாக இருக்கின்றதெனப்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டின் வருவாய்களாக அல்லது அத்தகைய ஏதேனும் மாற்றமாக இருக்கின்றதெனப்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, "ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(1) ஓர் உதவிப் பொலிசு அத்தியட்சகர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவர், எவரேனுமாள் பணம் தூய்தாக்கல் என்ற தவறு தொடர்பான ஏதேனும் செயற்பாட்டில் சம்பந்தப்பட்டுள்ளாரென்றும்,

அத்தகைய தவறு தொடர்பாக மேலதிகச் செயல்கள் புரியப்படுவதனை அல்லது குற்றவியல் ஆதனமென நியாயமான முறையில் நம்பப்படும் ஆதனத்தின் விரயத்தைத் தடுப்பதற்காக அவசியமாகவுள்ளதென்றும் நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, அத்தகைய ஆதனம் அல்லது அத்தகைய தவறு சம்பந்தமாக பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடியதும் அல்லது பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்படக்கூடியதும் நேரொத்த பெறுமதியைக் கொண்டதுமான ஏதேனும் ஆதனம் தொடர்பான ஏதேனும் கொடுக்கல் வாங்கலைத் தடைசெய்கின்றதும் (இதன கத்துப்பின்னர் ஒரு "முடக்கற் கட்டளை" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) கட்டளை யொன்றை வழங்கலாம்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங் கப்பட்டவொரு முடக்கற் கட்டளை பின்வரு வோருக்குச் சேர்ப்பிக்கப்படுதல் அல்லது அறிவிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) (i) எந்த ஆதனம் முடக்கற் கட்டளைக்கு அமைந்ததாக வுள்ளதோ அந்த ஆதனத்தை உடைமையில், இருப்பாட்சியில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற, அல்லது அதிலிருந்து எவையேனும் நன்மைகளைத் துய்க்கின்ற எவரேனுமாள்; அல்லது

(ii) எந்த ஆதனம் முடக்கற் கட்டளைக்கு அமைந்ததாக வுள்ளதோ அந்த ஆதனத்தில் அக்கறையொன்றை கொண்டுள்ளவரென நம்பப்படுகின்ற எவரேனுமாள்; அத்துடன்

(ஆ) அத்தகைய முடக்கற் கட்டளைக்கு பயன்கொடுப்பதற்குத் தேவைப் படுத்தப்படக்கூடிய வேறெவரேனுமாள் அல்லது நிறுவனம்.";

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "ஏழு நாட்கள் கொண்ட காலப்பகுதி ஒன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதினான்கு வேலைநாட்களைக்கொண்ட காலப்பகுதி ஒன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் பின்வருவனவற்றை இடுவதன்மூலமும்:-

(அ) "ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களையும்;

(ஆ) "அத்தகைய கணக்கிலுள்ள பணம், ஆதனம் அல்லது முதலீட்டின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய ஆதனத்திலுள்ள" என்னும் சொற்களையும்; அத்துடன்

(இ) "ஒரு வருட காலத்தை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இரண்டு வருடகாலத்தை விஞ்சாத" என்னும் சொற்களையும்.

முதன்மைச் சட்டவாக் கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஏழுநாட்கள்" என்னும் சொற்கள் அவ்வுட்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக "பதினான்கு வேலைநாட்கள்" என்னும் சொற் களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்-

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "மூன்று மாதங்களை விஞ்சுதலாகாதென்ற" என்னும் சொற் களுக்குப் பதிலாக "நான்கு மாதங் களை விஞ்சுதலாகாதென்ற" என்னும் சொற்களையும் "இரண்டாண்டு களைக்கொண்ட காலப்பகுதி யொன்றை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மூன்றாண்டுகளைக்கொண்ட காலப்பகுதியொன்றை" என்னும் சொற் களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில் "எந்தக் கணக்கு, ஆதனம் அல்லது முதலீடு தொடர்பான தேதி அந்தக் கணக்கு, ஆதனம் அல்லது முதலீடு தொடர்பில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எந்த ஆதனம் தொடர்பானதோ அந்த ஆதனம் தொடர்பில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான முடக்கற் கட்டளையொன்றை மேல் நீதிமன்றம் உறுதிப்படுத்துமிடத்து, நல் லெண்ணத்துடனான அம்முடக்கற் கட்டளைக் கமைந்ததாகவுள்ள ஆதனத்துக்கான அவர்களின் உரிமைக் கோரிக்கைகளை ஆதாரப்படுத்துவதற்கு நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதனை வசதிப்படுத்துவதற்கென, அத்தகைய முடக்கற் கட்டளை பற்றிய அறிவித்தலொன்றை வர்த்தமானியில் அல்லது சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்தது ஒரு செய்தித்தாளில் அது வெளியிடச் செய்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 9 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"முடக்கற் கட்டளைக்கு முரணான கொடுக்கல் வாங்கல்கள் வெற்றான வையும் வறிதான வையுமாதல் வேண்டும்

**9.** பத்தாம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட வாறாக நீதிமன்றத்தின் வலுவளிப்புடன் தவிர, ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள், முடக்கற் கட்டளை வலுவிலிருக்கையில் அம்முடக்கற் கட்டளைக்கமைந்ததாகவுள்ள ஏதேனும் ஆதனம் தொடர்பாகப் பயனுறுத்தப்படுதலாகா தென்பதுடன் அவ்வாறு பயனுறுத்தப்பட்ட ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் வெற்றானதும் வறிதானதுமாதும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆதனத்தின் பாகமாகவமைகின்ற அல்லது அத்தகைய ஆதனத்தை தானாகவே அமைத் துருவாக்குகின்ற அத்தகைய கணக்குத்

திரளுகின்ற எவையேனும் பெறுகைகள் எவையேனுமிருப்பின், அவை அத்தகைய கணக்குக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“அத்தியாவசியமான மற்றும் சட்டமுறையான கொடுக்கல்வாங்கல்களுக்கு மேல் நீதிமன்றம் வலுவளித்தல் வேண்டும்

**10.** ஏழாம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட முடக்கற் கட்டளையொன்றை உறுதிப்படுத்துகையில், அத்தகைய கட்டளையினால் பாதிக்கப்பட்ட எவரேனுமாளின் சட்டமுறையான தொழில் அல்லது வேறு அக்கறைகளை அக்கட்டளை சேதப்படுத்தக்கூடுமென்றும் அத்தகைய முடக்கற் கட்டளைக்கமைந்ததாகவுள்ள ஆதனம் தொடர்பான ஏதேனும் அத்தியாவசியமான கொடுக்கல்வாங்கல்கள் சட்டமுறையான வகையில் நிறைவேற்றப்படக்கூடுமென்றும் மேல் நீதிமன்றம் அபிப்பிராயப்படின், மேல் நீதிமன்றமானது, அதற்கெனச் செய்யப்பட்டவொரு விண்ணப்பத்தின்மீது அல்லது அதன் சொந்தப் பிரேரணையின்மீது-

(அ) அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் நிறைவேற்றப்படுவதற்கு வலுவளிக்கின்ற; அல்லது

(ஆ) 11 ஆம் பிரிவின்கீழ், ஏற்பாடு செய்யப்பட்டவாறு நியமிக்கப்படக் கூடிய அல்லது பணிக்கப்படக்கூடிய பெறுநரினால் அல்லது விசேட முகாமையாளரினால் அல்லது குற்றச்செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபையினால் அல்லது அவர்களின் அல்லது அதன் மேற்பார்வையின்கீழ்

அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் நிறைவேற்றப்படுவதற்கு

வலுவளிக்கின்ற கட்டளையை ஆக்கலாம். ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"ஒரு முடக்கற் கட்டளையை உறுதிப் படுத்தியதன் மேல் ஒரு பெறுநர் முதலியவர் களை நியமித்தல்

**11.(1)** எட்டாம் பிரிவின்கீழ் மேல் நீதிமன்றத்தினால் முடக்கற் கட்டளையொன்று உறுதிப்படுத்தப்படுவதன்மேல், உதவிப் பொலிசு அத்தியட்சகர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவர், முடக்குதற் கட்டளைக்கமைந்ததாகவுள்ள ஆதனத்தைப் பாதுகாக்கும், பேணிக்காக்கும், முகாமை செய்யும் அல்லது கையுதிர்க்கும் நோக்கத்துக்காக ஒரு பெறுநரை அல்லது விசேட முகாமையாளரை நியமிப்பதற்கான கட்டளையொன்றுக்காக அல்லது 2025 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, குற்றச்செயல்களின் வரும்படிகள் சட்டத்தின் பாகம் IV இன் நியதிகளின்படி, விடயத்துக்கேற்ப, குற்றச் செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபையின்மீதான பணிப்பொன்றுக்காக மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) மேல் நீதிமன்றம், (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது, அல்லது அதன் சொந்தப் பிரேரணையின்மீது, முடக்கற் கட்டளைக்கமைந்ததாகவுள்ள ஆதனத்தைப் பாதுகாக்கும், பேணிக்காக்கும், முகாமைசெய்யும் அல்லது கையுதிர்க்கும் நோக்கத்துக்காக ஒரு பெறுநரை அல்லது விசேட முகாமையாளரை நியமிக்கலாம்

அல்லது 2025 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, குற்றச்செயல்களின் வரும்படிகள் சட்டத்தின் பாகம் IV இல் அடங்கியுள்ள ஏற்பாடுகளின் நியதிகளின்படி, விடயத்துக்கேற்ப, குற்றச் செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகார சபையைப் பணிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(1) ஓர் உதவிப் பொலிசு அத்தியட்சகர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள எவரேனும் பொலிசு அலுவலர், ஒரு முடக்கற் கட்டளைக்கமைந்ததாகவுள்ள ஆதனத்தை உடைமையிலெடுத்தலும் வேறுவகையாகக் கையாளுதலும் வேண்டுமென்பதுடன், நீதிமன்றம், அத்தகைய பொலிசு அலுவலரினால் அல்லது ஓர் உதவிப் பொலிசு அத்தியட்சகர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள வேறெவரேனும் பொலிசு அலுவலரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது மற்றும் முடக்கற் கட்டளைக்கமைந்ததாகவுள்ள அத்தகைய ஆதனத்தின் சொத்தாண்மையை அல்லது கட்டுப்பாட்டைக்கொண்டுள்ள ஆளை நிச்சயிக்கும் நோக்கத்துக்காகவும் பின்வருமாறு கட்டளையிடலாம்:-

(அ) அத்தகைய ஆதனத்தை-

(i) கண்டறிவதற்கு, தடம் செய்வதற்கு அல்லது அதன்

அமைவிடத்ததைக் கண்டுப் பிடிப்பதற்கு;

(ii) அடையாளங் காண்பதற்கு அல்லது அளவீடுசெய்வதற்கு;

(iii) அதன் சொத்தாண்மையை, உடைமையை, பயனுறு சொத்தாண்மையை, அல்லது கட்டுப்பாட்டை நிலை நாட்டுவதற்கு; அல்லது

(iv) அது தொடர்பிலான வேறெவை யேனும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு,

இயைபான ஏதேனும் ஆவணம் அத்தகைய பொலிசு அலுவலருக்கு உடனடியாக ஒப்படைக்கப்படுதல் வேண்டுமென்றும்; அத்துடன்

(ஆ) அத்தகைய கட்டளையில் பெயர் குறிப்பிடப்பட்ட ஏதேனும் நிறுவனம், முடக்குதற் கட்டளைக் கமைந்ததாகவுள்ள ஆதனம் தொடர்பாக அல்லது சம்பந்தமாக அத்தகைய நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட எல்லா ஆவணங்களையும் தகவல் களையும் அல்லது நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறு அத்தகைய ஆதனம் சம்பந்தமாக அத்தகைய நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட தொழிற் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான எவையேனும் தகவல்களையும் அத்தகைய பொலிசு

அலுவலருக்குக் கொடுத்துதவுதல் வேண்டுமென்றும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(3) ஒரு முடக்கற் கட்டளைக் கமைந்ததாகவுள்ள ஏதேனும் ஆதனத்தின் சொத்தாண்மையை, உடைமையை, பயனுறு சொத்தாண்மையை அல்லது கட்டுப்பாட்டைக்கொண்டுள்ள ஆளை நிச்சயிப்பதன்மேல், அத்தகைய பொலிசு அலுவலர், (1)ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையை ஆக்கிய நீதிமன்றத்துக்கு, அதனை விடயத்துக்கேற்ப, அத்தகைய சொத்தாண்மையை, உடைமையை, பயனுறு சொத்தாண்மையை அல்லது கட்டுப்பாட்டை நிலைநாட்டி ஆதாரப்படுத்துகின்றவையும் பெற்றுக்கொள்ளப்பட்டவையுமான எல்லா ஆவணங்களுடனும் தகவல்களுடனும் சேர்த்து அறிக்கையிடுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 12அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 12அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"ஒரு முடக்கற் கட்டளைக் கமைந்த தாக்கப்பட வேண்டிய ஆதனத்துடன் சம்பந்தப்பட்ட வேறு ஏனைய ஆதனம்

**12அ.** பன்னிரெண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒப்படைக்கப்படும் படி அல்லது கொடுத்துதவப்படும்படி கட்டளையிடப்பட்ட ஏதேனும் ஆவணத்தை அல்லது தகவலைப் பெற்றதன்மேல்-

(அ) 7 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட முடக்குதற் கட்டளைக்கமைந்ததாக

வுள்ள ஆதனத்துடன் வேறேதேனும் ஆதனம் சம்பந்தப்பட்டுள்ளது; அல்லது

(ஆ) ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டிலிருந்து அடையப் பெற்றது அல்லது தேறிப்பெறப்பட்டதும் முடக்குதற் கட்டளைக்கமைந்ததாகவுள்ள ஆதனத்துடன் வேறேதேனும் ஆதனம் சம்பந்தப்பட்டுள்ளது,

என நம்புவதற்கு அத்தகைய பொலிசு அலுவலருக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, அப்போது, அத்தகைய பொலிசு அலுவலர், 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி அத்தகைய சம்பந்தப்பட்ட ஆதனம் தொடர்பாக ஒரு முடக்கற் கட்டளையை வழங்குதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(1) ஆளொருவர் 3 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, நீதிமன்றம், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வருமாறு கட்டளையிடுதல் வேண்டும்:-

(அ) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளினால் அல்லது வேறெவரேனு

மாளினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது உடைமை கொள்ளப்பட்ட, அல்லது அவரின் கட்டுப் பாட்டின்கீழுள்ள குற்றவியல் ஆதனம்;

(ஆ) எந்த குற்றவியல் ஆதனத்தில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் அல்லது வேறெவரேனுமாள் பயனுறு சொத்தாண்மையைக் கொண்டுள்ளாரோ அந்தக் குற்றவியல் ஆதனம்; அல்லது

(இ) விடயத்தின் சூழ்நிலைகள் அவ்வாறு அவசியமாக்கின், நேரொத்த பெறுமதியைக் கொண்ட ஏதேனும் ஆதனம்,

வில்லங்கங்கள் எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டனவாக அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமென்றும்.";

(2) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(1அ) அத்தகைய குற்றவியல் ஆதனத்தைக் கண்டுப்பிடிப்பதற்கு அல்லது கண்டறிவதற்கு முடியாதிருக்குமிடத்து, அத்தகைய ஆளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கும் நீதிமன்றம், அத்தகைய குற்றவியல் ஆதனத்தின் நேரொத்த பெறுமதியை அரசுக்குச் செலுத்துமாறு (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆளுக்கு அல்லது

அத்தகைய வேறு ஆளுக்குக் கட்டளையிடுதல் வேண்டும்.";

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(2) நீதிமன்றம், (1) ஆம் உட்பிரிவின்கீழ் இழப்பித்தற் கட்டளையொன்றை ஆக்கு முன்னர், அத்தகைய கட்டளை, அத்தகைய குற்றவியல் ஆதனத்தின்-

(அ) பெறுமதிக்காக நல்லெண்ணத் துடனான கொள்வனவு செய்பவரின்;

(ஆ) அதில் நல்லெண்ணத்துடனான அக்கறையொன்றைப் பெறு மதிக்காகக் கொள்ளுதல் செய்துள்ள வேறெவரேனு மாளின்; அல்லது

(இ) அதில் நல்லெண்ணத்துடனான அக்கறையைக் கொண்டுள்ள வொரு மூன்றாந் திறத்தவரின்,

உரிமைகளைப் பங்கப்படுத்தும் சாத்தியங் கொண்டதாவென்பதை அது அவசியமெனக் கருதக்கூடிய அத்தகைய விசாரணையின்மேல் நிகழ்தகவுச் சமநிலையின்மீது தீர்மானித்தல் வேண்டும்.";

(4) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடன டுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட் புகுத்துவதன்மூலமும்:-

"(2அ) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட இழப்பித்தற் கட்டளை

யொன்றினால் பாதிக்கப்பட்ட எவரேனுமாள், அத்தகைய கட்டளையை ஆக்குகின்ற நீதிமன்றத்துக்கு, அத்தகைய கட்டளையின் விளைவாக அவர் இழப்பொன்றை உற்றுள்ளாரெனக் குறிப்பிட்டு அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்காலப்பகுதியினுள் நட்டஈட்டுக்கான விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2ஆ) உட்பிரிவு (2அ) வின்கீழ் விண்ணப்பமொன்று செய்யப்படுமிடத்து, இழப்பித்தற் கட்டளையை ஆக்குகின்ற நீதிமன்றம், (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய கட்டளையின் விளைவாக விண்ணப்பகாரர் இழப்பொன்றை உற்றுள்ளாரெனத் திருப்திப்படுவதன்மேல், இழப்பிக்கப்பட்ட ஆதனத்திலிருந்து அத்தகைய ஆளுக்கு நட்டஈடு செலுத்தும்படி கட்டளையிடலாம்."; அத்துடன்

(5) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று பின்வருமாறு பயனுறுதல் வேண்டும்:-

(அ) நியாயாதிக்கங்கொண்ட நீதிமன்றத்துக்கு இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, அல்லது அதன்முன்னர் முடிவுறுத்துள்ளவிடத்து, இழப்பித்தற் கட்டளையை உறுதிப்படுத்தி

அல்லது நிலைநிறுத்தி அத்தகைய மேன்முறையீடு தீர்மானிக்கப்படுவதன்மேல்; அல்லது

(ஆ) நியாயாதிக்கங் கொண்ட நீதிமன்றத்துக்கு, அதற்காக அனுமதிக்கப்பட்ட காலப் பகுதியினுள் இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன் முறையீடெதுவும் செய்யப் பட்டிராதவிடத்து, அத்தகைய இழப்பித்தற் கட்டளைக் கெதிராக எக்காலப்பகுதி யினுள் மேன்முறையீடொன்று செய்யப்படலாமோ அக் காலப்பகுதி முடிவுற்ற பின்னர்.".

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக் கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(1) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைப் புரியாதவரும் அல்லது அதில் சம்பந்தப்பட்டிராதவரும், 7 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட முடக்குதற் கட்டளைக்கமைந்ததாக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தைச் சொந்தமாகவைத்திருப்பவரும், உடைமைகொள்பவரும், அல்லது அதில் பயனுகர் சொத்தாண்மையைக் கொண்டிருப்பவரும், அல்லது அதன் கட்டுப்பாட்டை உடையவருமான

எவரேனுமாள், 8 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழான அறிவித்தல் வெளியிடப் பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள், முடக்குதற் கட்டளையை உறுதிப்படுத்திய நீதிமன்றத்துக்கு, அவர் சொந்தமாக வைத்திருக்கும், உடைமை கொண்டிருக்கும் அதில் பயனுகர் சொத்தாண்மை கொண்டவராகவிருக்கும், அல்லது அதன் கட்டுப்பாட்டை உடையவராக விருக்கும் ஏதேனும் ஆதனத்தை அத்தகைய கட்டளையிலிருந்து தவிர்ப்பதற்கு, முடக்குதற் கட்டளையை உறுதிப்படுத்திய நீதிமன்றத்தின் இடையீட்டை நாடி அந்நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்."; அத்துடன்:-

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்-

(அ) "கணக்கு, ஆதனம் அல்லது முதலீடு" என்னும் சொற்கள் அவ்வுட்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம் அச் சொற்களுக்குப் பதிலாக "முடக்குதற் கட்டளைக்கமைந்ததாகவுள்ள ஆதனம்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "சொந்தமாக வைத்திருக்கின்ற, உடைமை கொண்டிருக்கின்ற அல்லது அதன்கட்டுப்பாட்டைவைத்திருக்கின்ற" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சொந்தமாக வைத்திருக்கின்ற, உடைமை கொண்டிருக்கின்ற அல்லது பயனுகர் சொத்தாண்மையைக் கொண்டவராயிருக்கின்ற அல்லது அதன் கட்டுப்பாட்டை வைத்திருக் கின்ற" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

*முதன்மைச் சட்டவாக் கத்தின் 15 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*“இழப்பித் தலின் மேல் ஆதனத்தைக் கையுதிர்த்தல்*

**15.** ஏதேனும் குற்றவியல் ஆதனம் அல்லது குற்றவியல் ஆதனத்தின் நேரொத்த பெறுமதிகொண்ட ஆதனம் 13 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின்மூலம் அரசுக்கு இழப்பிக் கப்பட்டுள்ளவிடத்து, சொல்லப்பட்ட ஆதனம் 2025 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, குற்றச்செயல்களின் வரும்படிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கையுதிர்க்கப் படுதல் வேண்டுமென நீதிமன்றம் கட்டளை யிடலாம்.”.

*முதன்மைச் சட்டவாக் கத்தில் 17அ, 17ஆ, 17இ, 17ஈ மற்றும் 17உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்*

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் பிரிவு 17அ, பிரிவு 17ஆ, பிரிவு 17இ, பிரிவு 17ஈ, மற்றும் பிரிவு 17உ என்பனவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*“ஆளொருவர் ஒரு சத்தியக்கடு தாசியை அல்லது சத்தியப் பிரமாணம் செய்யப் பட்ட கூற்றைப் பொலிசு அலுவலருக்குக் கொடுத்து தவுதலும் வேண்டும்*

17அ. மூன்றாம் பிரிவின் கீழான தவறொன் றுக்கான புலனாய்வுக்கு அமைந்த வராகவுள்ள ஆளொருவர் அத்தகைய புலனாய்வுக்குப் பொறுப்பாகவுள்ளவரும் ஓர் உதவிப் பொலிசு அத்தியட்சகர் பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசை யிலுள்ளவருமான பொலிசு அலுவலருக்கு, அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்ட ஏதேனும் சந்தேகிக்கப்பட்ட ஆதனம் எம்முறையில் அடையப்பெற்றது அல்லது தேறிப்பெறப்பட்டது என விவரித்தும், புலனாய்வின்கீழுள்ள கருமங்கள்மீது அத்தகைய பொலிசு அலுவலரினால் அவரிடம் கேட்கப்படும் ஏதேனும் கேள்விக்கு அல்லது புலனாய்வின்கீழுள்ள

கருமங்களுக்கு இயைபான எவையேனும் நிகழ்வுகளுக்கு மறுமொழிகளை வழங்கியும் ஒரு சத்தியக்கடுதாசியை அல்லது சத்தியப் பிரமாணம் செய்யப்பட்ட கூற்றொன்றைக் கொடுத்துதவுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், 3 ஆம் பிரிவின்கீழான தவறொன்றுக்காகப் புலனாய்வொன்றுக்கு அமைந்தவராகவுள்ள ஆளொருவரை ஒரு குற்றவியல் குற்றச்சாட்டுக்கு அல்லது ஒரு தண்டத்துக்கு அல்லது இழப்பித்தலுக்கு வெளிக்காட்டிவைக்கும் சாத்தியங்கொண்டதாகவிருக்கும் ஒரு சுய குற்றச்சாட்டு கூற்றை அல்லது குற்றவொப்புதற் கூற்றை அல்லது சத்தியக்கூற்றை அல்லது ஏதேனும் கேள்விக்கான மறுமொழியைக் கொடுத்துதவுவதற்கு அவர் கட்டுப்பாடுடைய வராதலாகாது.

ஒரு சத்தியக் கடுதாசியினதும் சத்தியப் பிரமாணம் செய்யப் பட்ட கூற்றொன்றினதும் ஏல்தகவு

**17ஆ.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், எவரேனுமாளினால் பிரிவு 17அ வின்கீழ் ஒரு பொலிசு அலுவலருக்குக் கொடுத்துதவப்பட்ட சத்தியக்கடுதாசி ஒன்று அல்லது சத்தியப் பிரமாணம் செய்யப்பட்ட கூற்று ஒன்று, 3 ஆம் பிரிவின்கீழான தவறொன்றுக்காக அத்தகைய ஆள் தொடர்பிலான விளக்கத்தில் இயைபானதாகவும் சான்றில் ஏல்தகவுடைய தாகவும் இருத்தல் வேண்டும்.

பொய்ச் சான்றளித்தல்

**17இ.** (1) மூன்றாம் பிரிவின்கீழான தவறொன்றுக்கான விளக்கத்தில் சான்றளிக் கும் எவரேனுமாள், அவ் விளக்கம் எந்நீதிமன்றத்தின்முன்னர் நடைபெறு கின்றதோ அந்நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச்

சட்டக்கோவையின் 188 ஆம் பிரிவின் கருத்துக்குட்படப் பொய்ச் சான்றளிப்பின், நீதிமன்ற அவமதிப்புக்காக அத்தகைய சாட்சிக்கு ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றினால் அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கான மறியற்றண்டனையினால் சுருக்கமுறையில் தண்டனைத்தீர்ப்பளித்தல் அத்தகைய நீதிமன்றத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஏதேனும் விளக்கத்தில் அத்தகைய ஆள் முரண்பாடான கூற்றுக்களை அளித்துள்ளாரென எண்பிப்பது போதுமானதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கூற்றுக்களுள் அது பொய்யானதென எண்பிப்பது அவசியமாதலுமாகாது.

புலனாய்வை நடாத்தும் போது பயன்படுத்தப்பட வேண்டிய விசேட புலனாய்வுத் தொழினுட்பங்கள்

**17ஈ.** (1) இச்சட்டத்தின்கீழ் புலனாய்வொன்றை நடாத்துகின்ற எவரேனும் பொலிசு அலுவலர், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் அத்தகைய பொலிசு அலுவலருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களுக்கு மேலதிகமாக, புலனாய்வை நடாத்துவதில் பின்வருவனவுட்பட்ட ஏதேனும் புலனாய்வுத் தொழினுட்பத்தைப் பயன்படுத்தலாம்:-

(அ) மேற்பார்வையும் அவதானிப்பும்;

(ஆ) மறைமுகமான நடவடிக்கைகள்;

(இ) காணொளிப் பதிவு;

(ஈ) கேட்பதற்கான உபாயங்களைப் பயன்படுத்துதல்;

(உ) கட்டுப்படுத்தப்பட்ட ஒப்படைப் புகள்; அல்லது

(ஊ) கணனித் தரவுகளையும் கணனி முறைமைகளையும் அணுகுதல்.

(2) ஓர் உதவிப் பொலிசு அத்தியட்சகர் பதவி வரிசைக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலர் ஒருவர், (1) ஆம் உட்பிரிவின் (இ), (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் பந்திகளின் நோக்கங்களுக்காக கட்டளையொன்றுக்காகப் போதிய விடயங்களுடன்சேர்த்து நீதிவான் நீதிமன்றத்துக்கு இரகசியமாக மறுதிறத்த வரல்லாத விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(3) ஓர் உதவிப் பொலிசு அத்தியட்சகர் பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவர், ஆளொருவர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளார், அல்லது புரிகின்றார் அல்லது புரியும் தறுவாயிலுள்ளார் எனச் சந்தேகிப்பதற்கு அல்லது நம்புவதற்கு இச்சட்டத்தின்கீழான புலனாய்வுகளை நடாத்துகின்ற ஓர் அலுவலர் நியாயமான ஏதுக்களைக் கொண்டிருப்பின், ஏதேனும் தொடர்பாடலின் ஏதேனும் நடத்தையை மற்றும் பதிதலை மறைவாகக் கண்காணிப் பதற்கு அதிகாரமளிக்கின்ற ஓர் ஆணைப் பத்திரத்துக்காக நீதிவானுக்கு எழுத்தில் விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(4) புலனாய்வை நடாத்துகின்ற அலுவலரி னால் பெறப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பதனையும் பேணிக் காப்பதனையும் உறுதிப்படுத்துவது (2) ஆம் உட்பிரிவின் கீழான விண்ணப்பத்தைச்

செய்கின்ற அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

கூட்டுப் புலனாய்வுக் குழாமை தாபித்தல்

**17உ.** (1) விடயத்தின் சூழ்நிலைகள் அவ்வாறு நியாயப்படுத்தினால், பின்வருவன பற்றிப் புலனாய்வொன்றை நடாத்தும் நோக்கத்துக்காக இலங்கைப் பொலிசாரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறு, இலங்கைப் பொலிசாருக்கும் இலங்கையில் அல்லது வேறேதேனும் நியாயாதிக்கத்தில் புலனாய்வுகளை நடாத்துவதற்கு தத்துவமளிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபைக்குமிடையேயான உடன்படிக்கையொன்றின்மூலம் குறித்தவொரு காலப்பகுதிக்காக ஒரு கூட்டுப்புலனாய்வுக் குழாம் தாபிக்கப்படலாம்:-

(அ) 3 ஆம் பிரிவின்கீழான தவறொன்று; அல்லது

(ஆ) ஒன்றில் பணம் தூய்தாக்கல் என்ற தவறுக்கு நேரொத்த தவறொன்றாக இலங்கைக்கு வெளியேயான ஏதேனும் நியாயதிக்கத்தில் அமையும் அல்லது இலங்கையில் புரியப்படின், இச்சட்டத்தின் கருத்தினுள் பணம் தூய்தாக்கல் என்ற தவறாக அல்லது ஒரு சட்டமுறையற்ற செயற்பாடாக அமையும் அந்நியாயாதிக்கத்தில் புரியப்பட்டுள்ளதெனச் சார்த்தப் பட்ட செயலொன்று.

(2) கூட்டுப் புலனாய்வுகளின்போது பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் சான்று அல்லது விடயம், புலனாய்வு செய்யப்பட்ட ஆட்கள் தகுதிவாய்ந்த நீதிமன்றங்களில்

விளங்கபப்படுமிடத்து, அத்தகைய நீதிமன்றங் களினால் பயன்படுத்தப்படலாம்.".

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக் கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்-

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்" என்னும் சொற்களையும் எண்களையும், "அதிகாரசபையின் பணிப்புரையின்மீது" என்னும் சொற் களுக்குப் பதிலாக "நிதிசார் உளவறிதற் கூறின் பணிப்புரையின்மீது" என்னும் சொற்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(இ) இச்சட்டத்தினால் சுமத்தப் பட்ட ஏதேனும் கடமையைப் புரிகையில் எவரேனும் பெறுநரினால், விசேட முகாமையாளரினால், குற்றச் செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபையினால் அல்லது ஆளினால் நல்லெண்ணத்துடன் செய்யப் பட்ட அல்லது செய்யப் பட்டதாக உட்கருதப்பட்ட ஏதேனும் சட்டமுறையான

செயலுக்காக அத்தகைய பெறுநருக்கெதிராக, விசேட முகாமையாளருக்கெதிராக அல்லது குற்றச்செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகார சபைக்கெதிராக அல்லது ஒரு பெறுநரின், விசேட முகாமையாளரின் அல்லது குற்றச்செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகார சபையின் அதிகாரத்தின்கீழ் ஏதேனும் செயற்பாட்டை நிறைவேற்றுகின்ற எவரேனுமாளுக்கெதிராக.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "அதிகார சபையின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நிதிசார் உளவறிதற் கூறின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும்:-

"இச்சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களையும், "ஓராண்டை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப்

பதிலாக “மூன்றாண்டுகளை விஞ்சாத” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், “ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத” என்னும் சொற்களையும், “பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாதவொரு” என்னும் சொற்களுக்குப் பதிலாக “மூன்றாண்டுகளை விஞ்சாதவொரு” என்னும் சொற்களையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை உட்புகுத்துதல்

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவாக பயனுறுதல் வேண்டும்:-

“நீதிமன்ற நடவடிக்கை முறைகள் பற்றிய தகவல் களைப் பகிர்தல்

**21.** ஆளொருவரின் அல்லது இழப்பிக்கப் பட்ட ஏதேனும் குற்றவியல் ஆதனத்தின் அல்லது குற்றவியல் ஆதனத்தின் நேரொத்த பெறுமதியை கொண்ட ஆதனத்தின் குற்றத்தீர்ப்பளிப்பை பயனுறுத்தும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தின் அல்லது அது தொடர்பான ஏதேனும் முடிபு அல்லது தீர்மானத்தின் கீழான தவறொன்று தொடர்பில் எவையேனும் நீதிமன்ற நடவடிக்கைகளின் போது பதிவுசெய்யப்பட்ட எவையேனும் தகவல்கள் ஏதேனும் வெளிநாட்டு சட்ட வலுவுறுத்தல் முகவராண்மையுடன் பரிமாற்றப்படலாம்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய 22 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"இழப்பிக் கப்பட்ட ஆதனத்தை அல்லது அதன் பெறுமதியைப் பகிர்தல்

**22.** வேறொரு நாட்டின் அல்லது வெளிநாட்டு அரசின் அரசாங்கத்தினால் அல்லது அதன்சார்பில் இலங்கை அரசாங்கத்துக்குக் கோரிக்கையொன்று விடுக்கப்படுமிடத்தும், ஒன்றில் ஒரு சர்வதேச ஒழுங்கேற்பாடு அவ்வாறு தேவைப்படுத்துமிடத்தும் அல்லது அனுமதிக்குமிடத்தும், அல்லது மரியாதை நலன்கள் கருதி, அமைச்சர், வெளிநாட்டலுவல்கள் என்ற விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் தோதானதெனக் கருதுமிடத்தும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் இழப்பிக்கப்பட்ட ஏதேனும் குற்றவியல் ஆதனம் முழுவதும் அல்லது அதன் ஏதேனும் பாகம் அல்லது நேரொத்த பெறுமதியைக் கொண்ட ஆதனம், அல்லது அதன் பெறுமதி, அத்தகைய கோரிக்கை விடுக்கின்ற நாட்டுக்கு அல்லது வெளிநாட்டு அரசுக்குக் கைமாற்றப்படுதல் வேண்டும் அல்லது அனுப்பப்படுதல் வேண்டும் என அவர் கட்டளையிடலாம்:

ஆயின், எவ்வாறாயினும், இழப்பித்தற் கட்டளையை வலுவுறுத்துவதில், அல்லது அத்தகைய ஆதனத்தைப் பாதுகாப்பதில், பேணிக்காப்பதில் அல்லது முகாமைசெய்வதில் அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்கள்மீது உறப்பட்ட கணிசமானளவிலான அல்லது அதிவிசேட ஆகுசெலவுகள், அத்தகைய ஆதனம் அல்லது அதன் பெறுமதி கோரிக்கை விடுக்கின்ற நாட்டுக்கு அல்லது வெளிநாட்டு அரசுக்குக் கைமாற்றப்படுமுன்னர் அல்லது அனுப்பப்படுமுன்னர் கழிப்பனவு செய்யப்படுதல் அல்லது அறவிடப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) “வேண்டுகோள் விடுக்கும் அரசின்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “வேண்டுகோள் விடுக்கும் வெளிநாட்டு அரசின்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் ஓரக்குறிப்பில் “வேண்டுகோள் விடுக்கும் அரசுக்கு” என்னும் சொற்களுக்குப் பதிலாக “வேண்டுகோள் விடுக்கும் வெளிநாட்டு அரசுக்கு” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“வெளிநாட்டு அரசுகள் முதலியவற்றுக்கான உதவியை வழங்குதல்

**27.** பின்வருவனவற்றில் இலங்கை அரசாங்கத்துக்கும் வேறேதேனும் வெளிநாட்டு அரசுக்கும் அல்லது குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்கும் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்புக்கும் இடையேயுள்ளவாறு உதவி வழங்குதல் தொடர்பில் 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்:-

(அ) பணம் தூய்தாக்கல் என்ற தவறு அல்லது ஏதேனும் சட்டமுறையற்ற நடவடிக்கை தொடர்பான புலனாய்வு, குற்றவழக்குதொடுப்பு, இழப்பிப்பு அல்லது கட்டளைகளை வலுவுறுத்துதல், அல்லது வேறெவையேனும் சட்ட வழக்கு நடவடிக்கைகள்; அத்துடன்

(ஆ) ஏதேனும் குற்றவியல் ஆதனத்தை அல்லது நேரொத்த பெறுமதியைக் கொண்ட குற்றவியல் ஆதனத்தை இழப்பித்தல் தொடர்பான எவையேனும் சட்ட வழக்கு நடவடிக்கைகள்.".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "நாடு" என்னும் சொல் எங்கெல்லாம் அவ்வுட்பிரிவில் காணப்படுகின்றதோ அவ்விடங்களிளெல்லாம் "வெளிநாட்டு அரசு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக் கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் "அரசு" என்னும் சொல் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் "வெளிநாட்டு அரசு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அவ்வுட்பிரிவுக்கான ஓரக்குறிப்பில் "வேறு அரசுகளுக்குத்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வேறு வெளிநாட்டு அரசுகளுக்குத்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக் கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "வேண்டுகோள் விடுக்கும் அரசின்"

என்னும் சொற்களுக்குப் பதிலாக "வேண்டுகோள் விடுக்கும் வெளிநாட்டு அரசின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு "வேறு ஏதேனும் நாட்டின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வேறு ஏதேனும் வெளிநாட்டு அரசின்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்

**29**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "பணம் தூய்தாக்குதல் தவறொன்றுக்காக நேரொத்த தவறொன்று தொடர்பில் வேறு அரசின் சட்டத்தின்கீழ் எவரேனும் ஆளுக்கு எதிராக அந்நாட்டில் தொடுக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒன்றில் பணம் தூய்தாக்கல் என்ற தவறுக்கு நேரொத்ததாக அவ்வெளிநாட்டு அரசின் சட்டத்தின்கீழான தவறொன்று தொடர்பில் அல்லது குற்றவியல் ஆதனத்தை இழப்பித்தல் தொடர்பிலான வழக்குநடவடிக்கைகள் எவரேனுமாளுக்கெதிராக அவ்வரசில் தொடுக்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது."; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவுக்கான ஓரக்குறிப்பில் "வேறு அரசுகளுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வேறு வெளிநாட்டு அரசுகளுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "ஏதேனும் தொழிலை "பெயர் குறிப்பிடப்பட்ட நிதிசாராத் தொழில்" என என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் தொழிலை "பெயர்குறிப்பிடப்பட்ட நிதிசாராத் தொழில் அல்லது உயர்தொழில்" என என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியான விரைவாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள்" என்னும் சொற்களையும், "கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "கருதப்படுதல் வேண்டும். ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்." என்னும் சொற்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) "ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு" எனத் தொடங்குவதிலிருந்து அப்பிரிவின் இறுதிவரையிலுமான எல்லா சொற்களையும் நீக்கிவிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"பொருள் கோடல்

**35.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

"பயனுறு சொத்தாண்மை" என்பது, பின்வருபவராகவுள்ள இயற்கை

ஆளொருவரினால் ஓர் உருவகத்தின் அல்லது நம்பிக்கைப்பொறுப்பின் அல்லது வேறு சட்ட ஒழுங்கேற்பாட்டின் சொத்தாண்மை அல்லது கட்டுப் பாடு என்று பொருளாகும்:-

(அ) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 130ஒ என்னும் பிரிவில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறு பயனுறு சொந்தக்காரராகவுள்ளார்;

(ஆ) (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புகள் கட்டளைச்சட்டத்தில் வரைவிலக்கணங் கூறப் பட்டவாறான நம்பிக் கைப் பொறுப்பொன்றின் அல்லது வெளிப்படை யானவொரு நம்பிக்கைப் பொறுப்பையொத்த வேறேதேனும் சட்ட ஒழுங்கேற் பாட்டின் விடயத்தில் அக் கட்ட ளைச் சட்டத்தின் 19அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டவற்றுக்குச் சமமான பதவியொன்றை வகிப்பவர்;

(இ) பந்திகள் (அ) மற்றும் (ஆ) என்பன ஏற்புடையன வாகாதவிடத்து, ஓர்

உருவகத்தை அல்லது நம்பிக்கைப்பொறுப்பை அல்லது வேறு சட்ட ஒழுங்கேற் பாட்டை நேரடியாக அல்லது நேரடியாக வல்லாமல் இறுதியாகச் சொந்தமாக வைத்திருப்பவர்; அல்லது

(ஈ) எவர் சார்பில் ஓர் உருவகம் அல்லது நம்பிக்கைப் பொறுப்பு அல்லது வேறு சட்ட ஒழுங்கேற்பாடு தொடர்பாகக் கொடுக்கல் வாங்கலொன்று நடாத்தப் படுகின்றதோ அவர்;

“கணனித் தரவுகள்” என்பது, கணனி முறைமையொன்று ஒரு பணியைப் புரிவதனை விளைவிப்பதற்குப் பொருத்தமானவொரு நிகழ்ச்சித் திட்டமுட்பட, ஒரு கணனி முறை மையில் செயல் முறைப்படுத்து வதற்குப் பொருத்தமான ஒரு வடிவத்தில் நிகழ்வுகள், தகவல்கள் அல்லது கருத்துருக்கள் பற்றிய ஏதேனும் பிரதிநிதித்துவம் என்று பொருளாகும்;

“கணனி முறைமைகள்” என்பது, 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணனிவழிக் குற்றச் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத் தல் வேண்டும்;

"நாடு" அல்லது "வெளிநாட்டு அரசு" என்பது, 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதேகருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"குற்றவியல் ஆதனம்" என்பது, ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டிலிருந்து அல்லது ஏதேனும் சட்டமுறையற்ற செயற் பாட்டின் வரும்படிகளிலிருந்து, அல்லது அத்தகைய ஆதனத்தின் ஏதேனும் மாற்றத்திலிருந்து நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், அடையப் பெற்ற அல்லது தேறிப் பெறப்பட்ட ஆதனம் என்று பொருளாகும் என்பதுடன் பின் வருவனவற்றையும் உள்ளடக் கும்:-

(அ) பணம் தூய்தாக்கலி லிருந்து அல்லது ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டிலிருந்து அல்லது அத்தகைய பணம் தூய்தாக்கலின் அல்லது ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டின் வரும் படிகளிலிருந்து அடையப் பெற்ற அல்லது தேறிப் பெறப்பட்ட வருமானம், இலாபங்கள், ஆதனம் அல்லது வேறு நன்மைகள்;

(ஆ) பணம் தூய்தாக்கலில் அல்லது சட்டமுறையற்ற செயற்பாடுகளில் பயன் படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்பட்ட கருவி வழிக் கொள்கைகள்;

(இ) தூய்தாக்கப்பட்ட ஆதனம்;

(ஈ) பயங்கரவாதத்துக்கு அல்லது பயங்கரவாதச் செயல்களுக்கு நிதி யளிப்பதில் பயன்படுத் தப்பட்ட, அல்லது பயன் படுத்தப்படுவதற்கு உட் கருதப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஆதனம், அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் ஒரு பயங்கரவாத ஒழுங்கமைப் பாகப் பெயர்குறிக்கப் பட்ட ஏதேனும் ஒழுங் கமைப்பின் ஆதனம்; அத்துடன்

(உ) பயங்கரவாதத்துக்கு, பயங் கரவாதச் செயல்களுக்கு நிதியளிப்பதிலிருந்தான வரும்படிகள் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் ஒரு பயங்கரவாத ஒழுங்கமைப் பாகப் பெயர் குறிக்கப் பட்ட ஏதேனும் ஒழுங் கமைப்பின் ஆதனம்;

“பெயர்குறிக்கப்பட்ட நிதிசாராத் தொழில்கள் அல்லது உயர் தொழில்கள்” என்பது, 2006ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல் களை அறிக்கையிடல் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“ஆதனத்தைக் கையுதிர்த்தல்” என்பது, அத்தகைய ஆதனத்தைப் பகிர்தலையும் அல்லது திருப்பிக் கொடுத்தலையும் உள்ளடக்கும்;

“நிதித்தொழில்” என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல் களை அறிக்கையிடல் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதேகருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“நிதிசார் உளவறிதற் கூறு” என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறு என்று பொருளாகும்;

“பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல்” என்பது, 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின்

3 ஆம் பிரிவில் வரைவிலக் கணங்கூறப்பட்டவாறான தவ றொன்று என்று பொருளாகும்;

"இழப்பித்தல்" என்பது, ஒரு நீதிமன்றக் கட்டளையொன்றின்மூலம் ஏதே னும் குற்றவியல் ஆதனத்தை அல்லது நேரொத்த பெறுமதி யைக்கொண்ட ஆதனத்தின் நிரந்தரமான பதிப்பு என்று பொருளாகும்; அத்தகைய ஆதனத்தின் சொத்தாண்மை எல்லா வில்லங்களிலிருந்தும் விடுபட்டதாக இதன்மூலம் அரசுக்குக் கைமாற்றப்படு கின்றது;

"நிறுவனம்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல் களை அறிக்கையிடல் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதேகருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப் புரையின்கீழ் இச்சட்டத்தின் விடயமும் இச்சட்டம் தொடர்பான பணிகளும் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டனவோ அந்த அமைச்சர் என்று பொருளாகும்;

"ஆள்" என்பது, எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆள் என்று பொரு ளாகும் என்பதுடன் இலங்கையில்

அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட தாயினுஞ்சரி அல்லது கூட்டிணைக்கப்படாததாயினுஞ் சரி, ஓர் ஆட்கள் குழுவையும், சட்ட ஒழுங்கேற்பாடு சட்ட ஆளுமையைக் கொண்டிருப் பினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி, அதனையும், மற்றும் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட அத்தகைய ஆளின் அல்லது ஆட்கள் குழுவின் கிளையொன்றையும் உள்ளடக்கும்;

“குற்றச்செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபை” என்பது, 2025 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, குற்றச்செயல்களின் வரும்படிகள் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களின் வரும்படிகள் முகாமை அதிகாரசபை என்று பொருளாகும்;

“ஆதனம்” என்பது, பருப்பொருள் சார்ந் ததாகவிருப்பினுஞ்சரி அல்லது பருப்பொருள் சாராததாக விருப்பினுஞ்சரி, அசைவுள்ள தாகவிருப்பினுஞ்சரி அல்லது அசைவற்றதாக விருப்பினுஞ் சரி, உருவமானதாக விருப்பினுஞ்சரி அல்லது அருவமானதாக விருப்பினுஞ்சரி, அல்லது மெய்நிகரானதாக

விருப்பினுஞ்சரி, ஒவ்வொரு வகையினவையுமான சொத்துக்கள் என்று பொருளாகும் என்பதுடன் அத்தகைய சொத்துக்களுக்கான உரித்தை அல்லது அவற்றிலான அக்கறையைச் சான்றுப்படுத்துகின்ற சட்ட ஆவணங்களையும் அல்லது சாதனங்களையும் உள்ளடக்கும்;

"விசேட முகாமையாளர்" என்பது, 2025 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, குற்றச்செயல்களின் வரும்படிகள் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி மேல் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்டவொரு விசேட முகாமையாளர் என்று பொருளாகும்;

"குறித்துரைக்கப்பட்ட நாடு" மற்றும் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கமைப்பு" என்பன, 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பயங்கரவாதி செயல்" என்பது, 2005 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாத நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தில் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"ஆதனம் தொடர்பான கொடுக்கல் வாங்கல்" என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்கும்: -

(அ) ஒரு கொள்வனவு, விற்பனை, கடன், பொறுப்பு, ஈடு, சோந்தை, அடைமானம், கை மாற்றம், ஒப்படைப்பு, குறித்தளிப்பு, மாற்றுரிமை, கடத்துகை, கொடை, நன்கொடை, நம்பிக்கைப் பொறுப்பின் உருவாக்குகை, தீர்த்து வைப்பு, ஏதேனும் பொருளின் வைப்புட்பட்ட வைப்பு, மீளப் பெறுகை, சொத்துகளுக்கிடையேயான கை மாற்றம் மற்றும் கடன் நீடிப்பு;

(ஆ) ஏதேனும் முகவராண்மை அல்லது அற்றோணித் தத்துவத்தின் வழங்குகை; அத்துடன்

(இ) தற்போதையதாயினுஞ் சரி அல்லது எதிர்காலத்தினதாயினுஞ் சரி, அல்லது உரித்தாக்கப்பட்டதாயினுஞ் சரி அல்லது எதிர்பாராததாயினுஞ்சரி, ஆதனத்தின் முழுமையிலான அல்லது அதன்

ஏதேனும் பாகத்திலான ஏதேனும் உரிமை, உரித்து, அக்கறை அல்லது சிறப்புரிமை எவரேனுமாளுக்கு அளிக்கப்படுவதனை விளைவிக்கின்ற, எந்த வடிவத்திலானதும், அல்லது எத்தகைய விவரணத்தினதானதும் அல்லது தன்மையினதானதும், எவ்வாறாயினும் விவரிக்கப்பட்டதுமான, அத்தகைய ஆதனத்தின் வேறேதேனும் கையுதிர்ப்பு அல்லது கையாளுகை;

“சட்டமுறையற்ற செயற்பாடு” என்பது, பின்வருவனவற்றின் கீழ் தவறொன்றாக அமைகின்ற ஒரு செயல் என்று பொருளாகும்:-

(அ) (218ஆம்அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டம் அல்லது 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்ட முரணான வியாபாரத்துக்கெதிரான சமவாயங்கள் சட்டம்;

(ஆ) பயங்கரவாதத்தைத் தடைசெய்த ஒடுக்குதலும் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டம் அல்லது ஒழுங்கு விதி;

(இ) 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டம்;

(ஈ) (182 ஆம் அத்தியாயமான) சுடுபடைக் கலன்கள் கட்டளைச்சட்டம், (183 ஆம் அத்தியாயமான) வெடிபொருட்கள் கட்டளைச்சட்டம் அல்லது 1966 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் சட்டம்;

(உ) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டமும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியும், விதியும் அல்லது கட்டளையும்;

(ஊ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 83இ;

(எ) தேசம்கடந்த நாடுகளுக்கிடையே ஒழுங்குப்படுத்தப்பட்ட குற்றச்செயல் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டம்;

(ஏ) இணையவெளிக் குற்றச் செயல், தொகுதிச்சங்கிலி தொழிநுட்பவியல், குறியீட்டு நாணயங்கள் அல்லது குறியீட்டுச் சொத்துக்கள் என்பன தொடர்பாக அப்போதைக்கு வலு விலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டம்;

(ஐ) சிறுவர்களுக்கெதிரான தவறுகள் தொடர்பாக அப்போதைக்கு வலு விலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டம்;

(ஒ) ஆட்களை வியாபாரஞ் செய்தலுடன் அல்லது கள்ளமாகக் கடப்பதுடன் சம்பந்தப்பட்ட தவறுகள் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டம்;

(ஓ) (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்

சட்டமும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியும், விதியும் அல்லது கட்டளையும்;

(ஔ) (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டமும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியும், விதியும் அல்லது கட்டளையும்;

(க) 2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, கொடுப் பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டமும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியும், விதியும் அல்லது கட்டளையும்;

(ங) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல்சார் சட்டம் மற்றும் அதன்கீழ் ஆக்கப்பட்ட சூழல்சார் ஏதேனும் ஒழுங்குவிதி, விதி அல்லது கட்டளை கடலோர மற்றும் சூழல் மற்றும் இயற்கை வளங்கள் தொடர்பாக அப்போதைக்கு வலு விலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டம்;

(ச) 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கர

வாதி நிதியளிப்பை ஒடுக்குதல்மீதான சமவாயச் சட்டமும் அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியும், விதியும் அல்லது கட்டளையும்;

(ஞ) 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக் குழுச் சட்டத்தின் பாகம் V;

(ட) 2001 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, கடற்கொள்ளைச் சட்டமும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியும், விதியும் அல்லது கட்டளையும்;

(ண) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டமும் அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியும், விதியும் அல்லது கட்டளையும்;

(த) (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவுகள் 367, 373, 386, 389, 390, 400, 401, 402, மற்றும் 403;

(ந) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் பிரிவு 189;

(ப) நேரடியற்ற வரிகளை விதித்தல், சேகரித்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டம்;

(ம) பொய்ப் புனைவுச் செயல்கள் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டம்;

(ய) நாணயத்தைப் போலி புனைதல் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டம்;

(ர) உற்பத்திப் பொருட்களைப் போலிபுனைதல் மற்றும் கடற் கொள்ளை தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டம்;

(ல) களவாடப்பட்ட அல்லது வேறு பண்டங்களைக் சட்ட விரோதமாக வியாபாரஞ் செய்தல் அல்லது

அவற்றின் கள்ளக் கடத்தல் தொடர்பாக அப் போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டம்;

(வ) 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவு ;

(அஅ) (188 ஆம் அத்தியாய மான) தொல்பொருட்கள் கட்டளைச்சட்டம் மற்றும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி, விதி அல்லது கட்டளை;

(அஆ) மரணதண்டனையினால் அல்லது ஐந்தாண்டுகளை அல்லது அவற்றிற் கதிகமானவொரு காலத் துக்கான மறியற்றண் டனையினால் தண்டிக் கப்படற்பாலதானவொரு தவறு தொடர்பாக அப் போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டம்,

அத்துடன் இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் நியாயாதிக்கத்தினுள் பணம் தூய்தாக்கல் என்ற தவறுக்கு நேரொத்த தவறொன் றாக அமையும் அல்லது இலங்கையில் புரியப்படின் பந்தி

(அ) முதல் பந்தி (அஆ) வரையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்றாக அமையும் அந் நியாயாதிக்கத்தினுள் புரியப்பட்ட செயலொன்றையும் உள்ளடக்கும்;

"மெய்நிகர் சொத்து" என்பது, எண்ணிம முறையில் வியாபாரஞ் செய்யப் பட முடியுமானதும் அல்லது கைமாற்றப்பட முடியுமானதும் கொடுப்பனவு அல்லது முதலீட்டு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட முடியுமானது மானவோர் எண்ணிம முறையிலான பிரதிநிதித்துவம் என்று பொருளாகும், ஆனால் அதிகாரமளிக்கப்பட்ட நாணயங் கள், பிணையங்கள், மற்றும் வேறு நிதிசார் சொத்துக்கள் என்பனவற்றின் ஏதேனும் எண்ணிமமுறையிலான பிரதி நிதித்துவத்தை உள்ளடக்காது; அத்துடன்

"மெய்நிகர் சொத்துக்களின் சேவை வழங்குநர்" என்பது, வேறோராளுக்காக அல்லது அவர்சார்பில் பின்வரும் செயற் பாடுகளுள் அல்லது தொழிற்பாடு களுள் ஒன்றை அல்லது அதற் கதிகமானவற்றை வழங்கு கின்ற, நிருவகிக்கின்ற, முகாமை செய் கின்ற அல்லது நடாத்துகின்ற எவரேனுமாள் என்று பொரு ளாகும்:-

(அ) மெய்நிகர் சொத்துக்கள் மற்றும் அதிகாரமளிக் கப்பட்ட நாணயங்களுக் கிடையேயான பரி மாற்றம்;

(ஆ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மெய்நிகர் சொத்துகளுக்கிடையே யான பரிமாற்றம்;

(இ) மெய்நிகர் சொத்துக் களின் கைமாற்றம்;

(ஈ) மெய்நிகர் சொத்துக் களின்மீதான கட்டுப் பாட்டை இயலச் செய் கின்ற மெய்நிகர் சொத்துக்களின் காப்பான வைத்திருக்கை அல்லது நிருவாகம்; அத்துடன்

(உ) ஒரு மெய்நிகர் சொத் தின் வழங்குநரினது முனைவுடன் அல்லது விற்பனையுடன் தொடர் புபட்ட நிதிசார் சேவை களில் பங்கு பற்றுதல் மற்றும் அவற்றை வழங்குதல்.".

**32.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.